உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ம்சு { விக்கிரம—மார்கழி } மலர் கூ


| | | |
|---|---|---|
| க. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 327 |
| உ. | சுவடி மதிப்பு | 329 |
| ௩ | புலவர் கல்லூரி | 331 |
| ச. | நந்தனாரது ஆதனூர்<br>திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் | 333 |
| ரு. | உள்ளங் கவர் கள்வன்<br>உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் | 335 |
| சு. | திருக்கைக் கோட்டி<br>திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் | 342 |
| எ. | மகளிர்தம் கல்வி<br>திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ. | 346 |
| அ. | கலைச் சொல் லாக்கம்<br>பொழிற்றொண்டர் | 353 |
| கூ. | கலைச் சொல் லாக்கம்<br>திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி. | 358 |


பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ்சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கரந்தைக் கூட்டுறவு மின் இயக்கிப் பதிப்பகம், தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ய௬ | விக்கிரம—மார்கழி | மலர் ௬ |


உ

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

### நல்ல செய்தி

நம் சங்கச் சார்பாக வுள்ள புலவர் கல்லூரிக்குச், சென்னைப் பல்கலைக் கழகத்துச் செயற் குழுவினர் (Syndicate) ஒப்புதல் கொடுத்தனர் என்பதைத் தமிழ் மக்களுக்கு யாம் மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இனிக், கல்விக் கழகத்தினரும் ஒப்பிய பின்னர், வித்துவான் முதலிய பட்டங்கள் பெறக் கல்வி பயில விரும்பும் மாணவர்கள், அகவைக் கட்டுப்பாடின்றி, இக்கல்லூரியில் பயிலலாகும். நம் தமிழ் மக்கள் இச்செய்தியறிந்து, மகிழ்ந்து, கல்லூரியைப் பெரிதும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

ஏ ஏ ஏ ஏ

### கலைச் சொல் லாக்கம்

பெருமை மிக்க வீரத்திரு. வி. எஸ். சீனிவாச சாத்திரியாரைத் தலைவராகக் கொண்ட கலைச் சொல் லாக்கக் குழுவின் அறிக்கையில் உள்ள குறைகளை எடுத்துக் காட்டி, அரசியலாருக்கு அனுப்புதற்கான ஒரு விண்ணப்பத்தின் வரைபடி யொன்றைத் தமிழ்ப் பொழில் கார்த்திகை மலரில் வெளியிட்டிருந்தோம்.

அவ்விண்ணப்பத்தின் கருத்தைத்தமிழிற் பிறிதோரிடத்தில் தந்துள்ளோம். தமிழ் மக்கள், அதனை ஆய்ந்து, மிகு தொகையினராய், அரசியலாரிடம் குறையிரந்து விண்ணப்பித்துத், தம் கருத்தைத் தெரிவித்துக் கொள்வார்களாக.

@ @ @ @

## பாட நூல் வெளியீடு

**சென்னை மாகாணத்தில், அரசியலாரின் உதவி பெறும் பாட** சாலைகளில் பயிலும் சுவடிகள் அரசியலாரின் ஒப்புதல் பெற்ற நூல்களா யிருக்கவேண்டு மென்பது விதி. இதனை மறுப்பாரில்லை.

பாடசாலை வகுப்புகளுக் கேற்ற முறையில், மொழி நூல்களுக்கும், கலை நூல்களுக்கும் பாட திட்டங்கள் வரையறுக்கப் பெற்றுள்ளன. இவ் வரையறைக்கு இயைந்தவாறு எழுதப் பெறும் நூல்கள் யாவை என்று ஆய்ந்து ஒப்புதற்குப் பாட நூற் கழகம் (Text Book Committee) அரசியலாரால் நிறுவப் பெற்றுளது. இம் முறைதானும் இழுக்குடைய தெனக் கூறுவாருமில்லை.

அண்மையில் வெளிப்போந்த கட்டளை, கலை வளர்ச்சி, மொழி வளர்ச்சி இரண்டிற்கும் கேடு விளைக்கற் பாலதாய்க் காணப்படுகின்றது. நூல் வெளியிடுவோர் முன்னதாக இருநூறு ரூபா செலுத்திக், தமது பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்; தாம் அனுப்பும் நூல் ஒவ்வொன்றிற்கும் 2 முதல் 15 ரூபா வரை கட்டணம் கட்டவேண்டும்; என்ற இவ் விரு விதிகளும் அறிவுடையோர் மதிக்கத் தகுவன வல்ல. கல்வியின் ஆட்சி தமது கையி லிருப்பதால், பணத்தைப் பறிகொள்ளலா மெனும் இழிந்த நோக்கம் ஒன்று; கல்வித் துறையில் தலை நிற்கும் கலைவாணர்கள் நூல் வெளியிடும் முயற்சியை மேற் கொள்ளா திருக்கச் செய்வது ஒன்று; பணம் படைத்த நூல் வணிகர்களின் பொருளீட்டும் முயற்சிக்குத் துணைநின்று, அன்னவரை ஊக்குவது ஒன்று. கலையறிவும், மொழிப் புலமையும் மிக்க

அறிவாளிகளை ஊக்கிக், கலையை வளர்க்கும் கடப்பாடு மிக்க அரசியலார், செய்கடனை மறந்து, இவ்வாறு விதித்தது மிகவும் வருந்தத் தக்க செயலாகும்.

குடிமக்களின் நலனை விழையும் அறிஞர்கள், இவ் விதிகளை மறுத்து, முடிவுகள் செய்து, அரசியலாரைத் தெருட்டுவாராக.

ஓ ஓ ஓ ஓ

தொல்காப்பியம்—பொருளதிகார வுரை

**தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்குத் திரு. சோமசுந்தர** பாரதியார் யெழுதிவரும் உரையில், மெய்ப்பாட்டியற் பகுதி **தமிழ்ப் பொழில்** ஐப்பசி மலரில் நிறைவுற்றது. புறத்திணையிய லுரை, கார்த்திகை மலரிற் றொடங்கி, வெளிவருகின்றது. இப் பகுதியைப் பொழிலன்பர்கள் தனியே பிரித்துச், சுவடியுருவில் சேர்த்துக் கொள்ளும்படியாக, இவ்வுரையைத் தனி பேடுகளாக வெளியிட்டு வருகின்றோம்.

## சுவடி மதிப்பு

**பாண்டியர் வரலாறு:** திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், தமிழாசிரியர், வாணுதுறை உயர்தரக் கல்விக் கழகம், கும்பகோணம்.

**திரு.** சதாசிவப் பண்டாரத்தார், தமிழ்ப் புலமை மிக்கவர் என்பதே யன்றிக், கல்வெட் டாராய்ச்சியிலும் தேர்ந்தவர். இவ்விரு திறங்களுடன், கட்டுரை வன்மை, கலை பயில் தெளிவுகளையும் துணையாகக் கொண்டு, அவர்கள் இயற்றியுள்ள இந்நூல், உயர்தர வரலாற்று நூல்களுடன் ஒத்தெண்ணத் தக்கதாயிருக்கின்றது. பல்கலைக் கழகங்கள், இந் நூலைக், கல்லூரி மாணவர்கள் முறையாகப் பயிலவேண்டிய பாடங்களுள் ஒன்றாக வகுத்தல் இன்றியமையாதது. தமிழ் மக்களும் இந்த நூலை ஆதரித்துப் படித்தல், அவர் தம் கடமையாகும்.

**கட்டுரைத் திரட்டு—பகுதி 1:** திரு. பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், நடுக்காவேரி.

புலத்துறை முற்றிய நலத்தகு நாவலர், பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டா ரவர்கள், அவ்வப்பொழுது, நம் தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி ஆகிய திங்களிதழ்களில் வெளியிட்டனவும், திருச்சிராப்பள்ளி வானொலியிற் பேசியனவுமாகிய நுண்பொருட் கட்டுரைகள் பன்னிரண்டனைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது இதுவாகும்.

ஆசிரிய ரவர்கள், பல்லாண்டாகத் தமிழ்க் கடலிற் றிளைத்துத், தம் நுண்மாண் நுழை புலனு லாராய்ந்து கண்ட அரும்பெறல் நன்மணிகளாய இலக்கியம், இசை, வரலாறு, கலை, சுவையென்னும் பல்வகைப் பொருளையும் மனத்தி னெண்ணி, மாசறத் தெளிந்துகொண்டு, இனத்திற் சேர்த்தி யுணர்த்திய கட்டுரைகள் இந்நூலுள் மிளிர்கின்றன.

தமிழ் நூற் பரப்பினையும், தமிழ் மொழியின் பொருட் கூறுகளையும், நம் மொழிச் சொற் செல்வங்களையும் கல்லூரி மாணவர்க்கு இன்னவென விளக்கி, மொழியில் ஆர்வமும், மனவெழுச்சியும், ஆராய்ச்சி யறிவும் உண்டாக்கும் தன்மை வாய்ந்த இவ்வுரைத் தொகுப்பினைப், பல்கலைக் கழகப் பாடநூற் குழுவினரும், கல்லூரி யாளர்களும் விரும்பி யேற்றுப் போற்ற வேண்டுகின்றோம்.

**கல்யாண வர்மனுர் இயற்றிய சாராவளி — தமிழ்மொழி பெயர்ப்பு:** திரு. சு. ஏ. குமாரசுவாமி ஆச்சாரியார், பறங்கிப்பேட்டை.

இந்த அருமையான நூல் சோதிடர்கட்கு மட்டுமன்றி, சோதிடம் தெரிந்து கொள்ள விரும்பும் ஏனையர்க்கும் மிக உதவியாயிருக்கும். இதனை ஏற்றுத் தமிழ் மக்கள் பயனெய்துவதுடன், இந்த மொழி பெயர்ப்பை ஆக்கித் தந்த திரு. சு. ஏ. குமாரசுவாமி ஆச்சாரியார் அவர்கட்குப் பெரிதும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையார்.

## புலவர் கல்லூரி

அன்பிற் சிறந்த ஐயன்மீர்,

**கரந்தைப்** புலவர் கல்லூரி தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஆயின. 1941—42-ஆவது ஆண்டு முதல் பல்கலைக் கழகத்தின் ஒப்புதல் (approval) பெறவிருக்கின்றது. கல்லூரி தளராது நடைபெறுதற்கான முதற்பொருள் வேண்டுமென்பது பல்கலைக் கழகத்தின் கட்டளை.

முதற்பொருளை ஈட்டுதற்குத் தொடங்கிய முயற்சி ஊக்கத்துடன் நடைபெறுமையால், யாம் முன்னிருந்த நிலையிலே இருந்து வருகின்றோம்.

நமது கலைக்கூடத்தின் 5 வகுப்புகளிலும் 100 மாணவர்களும், 4 ஆசிரியர்களும் இருந்து பணி செய்யவும், மாணவர்கள், தத்தம் திறனுக்கேற்ப, இசை, மருத்துவம், ஓவியம், சிற்பமாதிய கவின் கலை (arts), தொழிற் கலை (crafts) களிலும் பயிற்சியும், திறமையும் பெறுதற்கும் உரிய வசதிகளை அமைக்கவேண்டுமென்பது கருத்து.

தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலமாதிய பிறமொழிகளின் வளர்ச்சியைக் கருதி உழைக்கும் கலைக் கூடங்கள் எத்தனை? அவற்றிற்காகப் பணிசெய்து, செழுமையுடன் தருக்குற்று வாழும் கணக்காயர் எத்தனை? இக்கூறிய அயல்மொழிகள் தமிழ்நாட்டின் எல்லைக்கு வெளியேயுள்ள இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வளர்க்கப்பெறுவதையும், தமிழ்மொழி ஆங்கெல்லாம் புறக்கணிக்கப் பெறுவதையும் தமிழ் மக்கள் கருதுவா ரில்லையே!

தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி ஒதுக்கிடம் பெறுவதும், தமிழ்ப் புலவர்கள் வீணர்கட்கு எளியராய், அஞ்சியும், அடி பணிந்தும் வாழுமாறிருப்பதும், தமிழ் மக்களிற் பெரும்பாலர் இலங்கு நூல் கல்லாதிருப்பதும், யாம் அனைவரும் கருத்துடன் ஆய்ந்து, தமிழ் மொழி மதுகை யுறுதற் காவனவற்றைத் தொடங்கி, நாளும் செய்துவரும் கடப்பாட்டை நாம் மேற்கொள்ள வேண்டுமன்றே!

இத்துறையில் தமிழ்ப் பணி செய்ய முனைந்து நிற்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரிக்கு ஒல்லும் வகையான் உதவி செய்ய விரைந்து முந்துங்கள்.

இக் கல்லூரியின் ஆக்கங் கருதி, ஒவ்வொரு தமிழ் மகனும், ஆண்டு ஒன்றிற்கு, ரூபா ஒன்ருகிலும் தந்து உதவுமாறு விண்ணப்பித்து, ஒரு ரூபா நன்கொடைச் சுவடிகள் சேர்த்துச், சில அன்பர்களிடம் ஒப்புவித்தோம். சிலர் அன்புடன் இவ் வரும் பணியை எற்றுத், தொகைகளைத் திரட்டி அனுப்பினர். யாம் மேற்கொண்டிருக்கும் தொண்டின் பெருமையுடன், இவர் கள் திரட்டித் தந்த தொகைகளை ஒப்பு நோக்கும்போது, தினைத் துணையனவாய்க் காணப்படினும், உதவியின் அருமை பெருமை களை உய்த்து நோக்கி, அவை பனைத்துணையன வென நன்றி யுடன் மதிக்கின்ருேம்.

எமது நன்கொடைச் சீட்டுகளை வைத்திருக்கும் மற்றும் பல நண்பர்கள் யாது செய்தனர் எனத் தெரிந்துகொள்ள முடியாதிருக்கின்ருேம்.

சங்கத்தின் நன்கொடைச் சீட்டுகளுக்குத் தொகை திரட்டி அனுப்பிய நண்பர்களும், திரட்டி அனுப்பும் எண்ணத்துடன் சீட்டுகளை வைத்திருக்கும் அன்பர்களும், உற்ற துணைவர்களை நாடி, அவர்களுடன் தோட்கோப்புக்கொண்டு, மேலும் மேலும் தொகைகளை யீட்டித், தமிழ்த் தாயின் அரும் பணிக்கு நாட் கடனுக அனுப்பிவருமாறு பணிவுடன் வேண்டுகின்ருேம்.

சங்கத்தின் நன்கொடைச் சுவடிகளை வைத்திருக்கும் அன்பர்கள், அவற்றின் விவரங்களையும், எப்பொழுது அவற் றிற்குரிய தொகை எமக்கு அனுப்பப்பெறும் என்ற செய்தி யையும் எழுதி யனுப்புவாராக.

த. வே. உமாமகேசுவரன்,

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

---

# நந்தனாரது ஆதனூர்

திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

சிவனடியார் அறுபத்து மூவருள் ஒருவரும், நந்தனார் என்று வழங்கப் பெறுபவரும் ஆகிய திருநாளைப்போவார் நாயனாரது வரலாற்றை, நம் தமிழகத்தில் அறியாதார் யாவர்? அப் பெரியார் பிறந்து வாழ்ந்த திருப்பதி ஆதனூர் என்பர், திருத்தொண்டர் திருவந்தாதியின் ஆசிரியராகிய நம்பியாண்டார் நம்பிகள். ஆதனூர் என்று வழங்கும் ஊர்கள் நம் நாட்டில் பல இருத்தல் யாவரும் அறிந்ததே. அன்பினாலோ, ஆராய்ச்சியின்மையாலோ, பலரும் தம் தம் ஊருக்கு அண்மையிலுள்ள ஆதனூரே, நந்தனாரது ஊர் என்று கூறி வருகின்றனர். எனவே, உண்மையில், நந்தனார் பிறந்த பேறு எய்திய பதி யாது என்பது ஆராய்தற் குரியதாகு மன்றோ?

அறுபான் மும்மை நாயன்மார்களது வரலாறுகளைக் கூறும் திருத்தொண்டர் புராணம், நந்தனாரது ஆதனூர் யாண்டையது என்பதை அறிந்து கோடற்குப் பெரிதும் உதவுகின்றது. சேக்கிழா ரடிகள், அப் புராணத்தில், ஆதனூரைப்பற்றிக் கூறியிருப்பது,

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர்.

என்பது. இவ் வரிய செய்யுளால், ஆதனூர் என்பது, சோழமண்டலத்தின் உள்நாடுகளுள் ஒன்றாகிய மேற்கா நாட்டில் உளது என்னும் செய்தி வெளியாகின்றது.

சோழமண்டலத்தி லிருந்த உள் நாடுகள் எல்லாவற்றையும், கல்வெட்டுக்களின் துணைகொண்டு துருவி நோக்குங்கால்,

மேற்கா நாடு என்ற பெயருடைய நாடு ஒன்று கொள்ளிடத்தின் வட கரையில் முன்னர் இருந்தது என்று தெரிகிறது. கொள்ளிடத்தின் வடகரையி லுள்ள பாடல்பெற்ற தலமாகிய ஓமாம் புலியூர், அம் மேற்கா நாட்டில் உள்ள ஒரு திருப்பதி என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது.[1] எனவே, சிதம்பரந் தாலூகாவி லுள்ள ஓமாம் புலியூர் என்னும் தலத்திற்கு அண்மையில் நந்தனாரது ஆதனூர் இருத்தல் வேண்டும் என்பது திண்ணம். ஆகவே, ஓமாம் புலியூர்க்கு மேற்கே, ஒன்றரை மைல் தூரத்தில், கொள்ளிடக் கரையி லுள்ள ஆதனூரே, நந்தனர் பிறந்தருளிய பெருமை யுடையது என்பது வெளிப்படை. கொள்ளிடத்தின் அலைகள் வந்து அடிக்குமாறு, அதற்கு அத்துணை அண்மையில் ஆதனூர் அமைந்துளது என்று சேக்கிழா ரடிகள் குறித்திருப்பது ஈண்டு அறியத்தக்கது. இவ் வாதனூர்க்கு அண்மையி லுள்ள பாடல் பெற்ற தலமாகிய கடம்பூரும், மேற்கா நாட்டில் உள்ளதோர் திருப்பதி என்று அவ்வூர்க் கல்வெட்டுக்கள் கூறுவது, ஆதனூரைப்பற்றிய எனது கொள்கையை வலியுறுத்துதல் காண்க. எனவே, மேற்கா நாட்டி லுள்ள பாடல் பெற்ற தலங்களாகிய ஓமாம்புலியூர்க்கும், கடம்பூர்க்கும் இடையிலுள்ள ஆதனூரே, நந்தனரது ஊர் என்பது நன்கு துணியப்படும். இனித், திருப் பனந்தாளுக்கு வடக்கே யுள்ள கீழை அணைக்கட்டுக்குக் கிழக்கே, ஏழு மைல் தூரத்தில், கொள்ளிடத்தின் வடகரையி லுள்ளது இவ் வாதனூர் என்பது அறியற்பாலதாகும்.

---

1. Inscriptions 504 & 506 of 1926

# உள்ளங் கவர் கள்வன்

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

வத்தவர் கோமகனாகிய உதயணனைக் காதலித்த வாசவதத்தை, அவனை நினைந்து, நிறையழிந்து, அறிவு கலங்கினளாய்த், தனது உள்ளத்தைக் கள்வன் கவர்ந்துகொண்டு போய்விட்டான், எனக் கூறுகின்றாள்.

காமன் என்னும் நாமத்தை மறைத்து
வத்தவன் என்னும் நற்பெயர் கொளீஇப்
பிறைக்கோட் டியானை பிணிப்பது மன்றி
நிறைத்தாழ் பறித்து என்நெஞ்சகம் புகுந்து
கள்வன் கொண்ட உள்ளம் இன்னும்
பெறுவன் கொல்லென மறுவந்து மயங்கி.

—பெருங்கதை, உஞ்சை ௩௩, ௧௭௪-௧௭௮

இங்கு, நெஞ்சம், காவலுள்ள ஒரு வீடாகக் கூறப்பட்டது. அவ்வீட்டுக் கதவுக்குத் தாழ் எதுவெனில், மகளிர்க்கு இயல்பாகவுள்ள நிறையென்பது. அவ்வீட்டினுட் காக்கப்பட்ட சிறந்த பொருள் 'உள்ளம்'. பெண்களுக்கு உரிய சிறப்பியல்பு ஆதலின், 'நிறை'யினைப், 'பெண்மை' யெனலுமாம். நிறையாகிய பெண்மை, 'உள்ளம்' ஆகிய நிதியத்திற்குக் காவல் அரண் எனவும் ஆன்றோர் செய்யுளுட் கூறப்பட்டது. இவ்வரணை அழித்தற்கு இயன்ற படை எதுவெனில், அது தலைமகன் பணிந்து கூறுஞ் சொற்கள் என்பது.

'பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.'

என்று தலைவி கூறுகின்றாள். குறிஞ்சிக் கலியினுள்ளே ஒருத்தி தனது உள்ளத்தைக் கவர்ந்த ஆண்மகனைக் குறித்துத் தோழிக்குக் கூறுகின்ற இடத்திலே,

'கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்'

என்கின்றாள்.

'இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்--றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.'

என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுளி னுள்ளும், நெஞ்சமாகிய கோட்டையினது நிறையாகிய அரணினை யழித்த கள்வனது செய்தி கூறப்பட்டது.

இத்தகைய அடாத செயல் ஆடவர்க்குத்தான் உரியதோ வென்றால், அன்று. மென்னீர ராகிய மகளிரும், கண்ணாகிய வேலினை எறிந்து, ஆடவரது ஓர்ப்புறு நெஞ்சத்தைத் தாக்கி, அவர்தமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுதற்குரிய ரென்பது, ஆன்றோர் செய்யுளான் அறியக்கிடக்கின்றது. முல்லைக் கலியினுள்ளே, ஓர் ஆண்மகன், ஒருத்தியை நோக்கி,

'இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினா லென்னெஞ்சம்
களமாக்கொண் டாண்டாயோர் கள்வியை யல்லையோ'

என்கின்றான். உதயணனும், வாசவதத்தையை, 'சிதர் மலர்த் தாமரைச் செங்தோடு கடுப்ப, மதரரி நெடுங்கண் வேற்படை கான்ற, புள்ளி வெம்பனி கரந்த கள்வி' யென்கின்றான்.

'உள்ளங் கவர் கள்வன்' என்னும் சொற்றொடரின் பொருளினை ஒருவாறு தெளிந்து கொண்டோம். இச்சொற்றொடர், 'தோடுடைய செவியன்' என்னுந் தேவாரத் திருப்பதிகத்தினுள் வருகின்றது. இது தந்தையை நோக்கி மைந்தன் கூறியமொழி ஆகுமோ எனில், ஆகாது என்பது வெளிப்படை. இச்செய்யுளை வெளியிட்ட பொழுது, திருஞானசம்பந்த சுவாமிகளுடைய கண் முன்னே தோன்றிய காட்சியினை, 'ஓவியன் உள்ளத்து உள்ளியது உணர்வது' போல, அவருடைய திருவாயினின்று எழுந்த மொழிகளைக் கொண்டு நாம் ஒருவகையாக அறிந்து கொள்ளலாம். முதலேழு செய்யுட்களின் முதலீரடிகள் 'உள்ளங் கவர் கள்வ'னது உருவத்தை நமக்குக் காட்டுகின்றன. திருச்செவியி லணிந்த குண்டலமும், திருமுடியிற் புனைந்த தூய வெள்ளிய பிறையும், கங்கைப் புனலும் தோன்றுகின்றன. திருமேனி முழுவதிலும் சுடலைப்பொடி பூசப்பட்டிருக்கிறது. திருக்

கரத்திலே வற்றிக் காய்ந்த தலையோடு. முற்றிய ஆமையினது ஓடும், பன்றிக் கொம்பும், இளம் பாம்பும் ஆபரணங்கள். ஒரு திருக்கையில் நெருப்பு; மற்றொரு திருக்கையில் மழுப்படை. 'ஒருமை பெண்மை யுடையன்' என அருமையாக உரைசெய்ய அமர்ந்த திருவுரு இவனது உருவம். அஃதன்றி, ஆணும் பெண்ணுமாக இருவர் தோன்றவில்லை. ஊர்தியாகிய எருதினின்றும் கீழே இறங்கி, ஆடல் பாடலோடு வருகின்றான். பேருவகையோடு ஆடியும் பாடியும் வருகின்ற இப்பெரியோன் உடையொன்றும் அணிந்ததாகத் தோன்றவில்லை. இவனது ஆடலையும், பாடலையும், அழகையும் கண்ட இளமகளிர், நிறை யழிந்து, கையி லணிந்த வளையல்கள் சோரத், தெருவீதியில் வந்து நிற்கின்றனர். முன்னொரு காலத்திலே, தாருகா வனத்திலே, இப்பெரியோன் இவ்வண்ணமே நடந்து கொண்டான் என்பது நமது நினைவுக்கு வருகிறது. கூட்டமாக வந்து நிற்போருள் ஒருத்தி, ('ஏர்பரந்த இனவெள் வளைசோர', 'இறைகலந்த இனவெள் வளைசோர') கையிலணிந்த வெள்ளிய வளையல்கள் கழன்று விழத், தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வனது தன்மையை வாய்விட் டுரைக்கின்றாள்.

'வரிவளை நின்றன வையையார் கோமான்,
புரிவளை போந்தியம்பக் கேட்டு'

என்னும் பழம் பாடலினுள்ளும் வளையல் சோர்ந்த செய்தி நமக்குக் கிடைக்கின்றது.

சீகாழிப்பதியில் நடந்த இச்செயல் மீட்டும் திருப்பரிதி நியமத்தில் நடக்கிறது.

'பிறைவளர் செஞ்சடை பின்தயங்கப் பெரிய மழுவேந்தி
மறையொலி பாடிவெண் ணீறுபூசி மனைகள் பலிதேர்வார்
இறைவளை சோர எழில்கவர்ந்த இறைவர்க் கிடம்போலும்
பறையொலி சங்கொலி யால்விளங்கும் பரிதிந் நியமமே.'

'கண்கொண்ட சாயலோ டேர்கவர்ந்த கள்வர்'
'இரவிற் புகுந்தென் எழில்கவர்ந்த இறைவர்'
'நாண்முகங் காட்டி நலங்கவர்ந்த நாதர்'

'அஞ்சுரும் பார்குழல் சோரவுள்ளங் கவர்ந்தார்'
'ஏர்புல்கு சாயலெழில் கவர்ந்த இறைவர்'
'சங்கொடு சாயல்எழில் கவர்ந்த சைவர்'
'காசடை மேகலைசோர வுள்ளங் கவர்ந்தார்'
'ஏடலர் சோர எழில் கவர்ந்த இறைவர்'
'நல்வளை சோர நலங் கவர்ந்த நாதர்'

இத்தகைய அன்புத்தொடர்பினை, வடநூலார் மதுரபாவம் என்பர். 'சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாசமார்க்கம்' என்னும் நான்கினுள், இது சன்மார்க்கத்தைச் சாருமே யன்றிச், சற்புத்திர மார்க்கத்தைச் சாராது.

'போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே'

என்னும் திருப்பாடல் வருகிற திருப்பதிகத்திலே, 'பெண்ணினல்லாள்', 'பேதையாளவள்', 'நியர்வளை முன்கையாள் நேரிழையவள்', 'பெடைநடையவள்', 'சிற்றிடைப் பேரல்குற் றிருந்திழையவள்', 'நிறைவளை முன்கையாள் நேரிழையவள்', 'பெருக்கு நீரவள்', 'பிடிநடையவள்', 'பேரறத்தாள்' என்றெல்லாம் இறைவியைச் சுட்டும் வாசகங்களை நோக்குவோமாக. இவை, காதல் வயப்பட்ட இளமங்கையொருத்தி, தான் காதலித்த தலைவனது பாகத்திருக்கும் பேற்றினளாகிய மாற்றுளைச் சுட்டும் வாசகங்களாகக் காணப்படுகின்றனவே யன்றித், திருமுலைப்பா லளித்த தாயைச் சுட்டும் வாசகங்களாகக் காணப்படவில்லை. பொற்கிண்ணத்தது பாலன்று, அடிசில் என்பதும் நோக்கத்தக்கது. தாதைமுன் தலைவி கூற்று நிகழ்வது, பண்டையோர் கண்ட ஐந்திணையொழுக்கத்துக்கு ஒவ்வாதாதலின், முனிவுற்ற தாதையாருக்கு, இளமகளொருத்தி, தந்நிறை யழிய, வளைசோர, உள்ளங்கவர்ந்த கள்வனைக்காட்டி, 'இவனே அவன்' எனக் கூறினுள் என்பது நெறியாகாது.

'தோடுடைய செவியன்' திருப்பதிகத் திருக்கடைக் காப்பினுள்ளே, 'ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம் பந்தன்' என்னுந் தொடர் அரிய பொருளொன்றினைத் தருகின் றது. 'ஒருநெறிய மனம்', யோகநெறி கைவந்து ஒருக்கமுற்ற மனம். அந்நிலையிலே அகக்கண்முன் தோன்றிய தெய்வக் காட்சியே இப்பதிகத்திற் கூறப்பட்டதென்பது ஒருதலை. பொற் கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத் தாதையார் முனிவுற்ற வெல்லையிலே, பாடிய திருப்பதிகம் வேறொன்றாயிருக்கலாம்.

'வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அளியரசே ஒளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே'

'பாராரே யெனையொருகால் தொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப் பவளக்காற் கபோதகங்காள்
தேராரும் நெடுவீதித் திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக் கென்னிலைமை நிகழ்த்தீரே'

'முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறும்நோய் அறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந் திருத்தோணி புரத்துறையும்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பயலை கூறீரே'

என வருவனவும், திருத்தோணிபுரத் துறையும் உள்ளங் கவர் கள்வனை நினைந்து இரங்கும் தலைமகளது காமமிக்க கழிபடர் கிளவியாக அமைந்தன.

'எரியார் மழுவொன் றேந்தி அங்கை யிடுதலை யேகலனா
வரியார் வளையார் ஐயம் வவ்வாய் மாநலம் வவ்வுதியே
சரியா நாவின் வேத கீதன் தாமரை நான்முகத்தன்
பெரியான் பிரமன் பேணி யாண்ட பிரம புரத்தானே'

'கயலார் தடங்கண் அஞ்சொல் நல்லார் கண்டுயில் வவ்வுதியே',

'பகலாப் பலிதேர்ந் தையம் வவ்வாய் பாய்கலை வவ்வுதியே',

'அங்கோல் வளையார் ஐயம் வவ்வா யால் நலம் வவ்வுதியே',

'பிணிநீர் மடவார் ஐயம் வவ்வாய் பெய்கலை வவ்வுதியே',

'குழலார் மடவார் ஐயம் வவ்வாய் கோல்வளை வவ்வுதியே'

என வருவனவும், பிரமபுரத் துறையும் உள்ளங் கவர் கள்வன் வற்றலோடு கலனாகப் பலிதேரச் செல்வதனையும், அவனைக் கண்டு காமுற்ற மடவார் நிறையழிய, வளை நெகிழத், துகில் சோரத், தம்வய மிழந்து நிற்பதனையும் காட்டுகின்றது.

'சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே'

'அறையார் கழலும் அழல்வா யரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே'

என்பன, செவிலியிரங்கற்றுறையாக, இறைவளையினையும், எழிலினையும் கவர்ந்த கள்வனை முன்னிலைப்படுத்தின. இவையும் உயர்ந்த ஞானத்தின்பால வென்பதை, 'வயஞானம் வல்லார் மருகற்பெருமான், உயர்ஞான முணர்ந்தடி யுள்குதலால், இயன் ஞான சம்பந்தன்' என்னுந் திருக்கடைக் காப்பினாலும் அறிகின்றாம்.

'துள்ளும் மான்மறி யங்கையி லேந்திஊர்
கொள்வ னாரிடு வெண்டலை யிற்பலி
கள்வ னாருறை யுங்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின வோயுமே'

என்னும் பாடலினுள்ளும், 'கள்வன்' என்னுஞ் சொல் வழக்கு வருகிறது.

'நறப்பொலிபூங் கழிக்கானல் நவில்குருகே யுலகெல்லாம்
அறப்பலிதேர்ந் துழல்வார்க்கென் அலர்கோடல் அழகியதே
சிறப்புலவன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம் பெருநலமே'

என்பதும், தலைவி யிரங்கலாக அமைந்தது. இவற்றையெல்லாம்

நோக்கும் பொழுது, உலக மாதாவாகிய தாயை மறந்து, 'யாவருக்குந் தந்தை'யை, அத்தொடர்பினை மாற்றி, இன்னுயிர்த் தலைவனுக்கித், தானே அவனுய், அவனே தானுய், அத்தலைவனைக் காமுற்று நின்ற சன்மார்க்க ஞானநிலையே ஞானசம்பந்தப் பெருமானது நிலையென்று ஒருவாறுகப் புலப்படுகிறது. 'தாயுடன் சென்றுயர் தாதையைக் கூடிப் பின் தாயை மறந்தேயுமதே நிட்டை' எனப் பின்னுளிற் கூறிய பெரியார் வாக்கும், இந்நிலையினைத்தான் குறிப்பிட்டதோ என எண்ண வேண்டியிருக்கிறது.

# திருக்கைக்கோட்டி

திரு. தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

பண்டைக் காலத்தில், நம் முன்னோர்கள் நூல்கள் எல்லாவற்றையும் பனை யேடுகளில் எழுதிப் படித்துவந்தனர் என்பது யாவரும் அறிந்ததே. ஏட்டுச் சுவடிகள் பழுதுற்று அழிந்து போகுந் தன்மைய வாகும். ஆதலால், அரிய நூல்கள், இறவாது, என்றும் நின்று நிலவுமாறு, அவற்றைச் செப்பேடுகளில் எழுதி வைக்கும் வழக்கமும், முற்காலத்தில், நம் நாட்டில் இருந்து வந்தது. 'அன்பினைந்திணை' என்று தொடங்குவதும், அறுபது சூத்திரங்களைத் தன்னகத்துக் கொண்டுள்ளது மாகிய, 'இறையனார் அகப்பொருள்' என்னும் நூல், மூன்று செப்பித ழகத்து வரையப்பெற்று, ஆலவாய் அவிர்சடைக் கடவுள் பீடத்தின்கீழ் இடப்பெற்றிருந்தது என்னும் வரலாறும் ஈண்டு உணரற்பாலது.

இலண்டன் மாநகரி லுள்ள பொருட் காட்சிச் சாலையில், வெள்ளி யேடுகளில், பாலி மொழியில், எழுதப் பெற்ற சிறு நூல் ஒன்று உளதாம். அன்றியும், ஈயத் தகட்டில் எழுதப் பெற்ற பௌத்த நூல் ஒன்றும் அங்கிருக்கின்றதாம்.[1]

கி. பி. 1070 முதல் 1120 வரையில் ஆட்சிபுரிந்த முதற் குலோத்துங்க சோழனது படைத் தலைவர்களுள் ஒருவனாகிய மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்பான், சைவ சமய குரவர் மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத், தில்லையம்பதியி லுள்ள கோயிலில் வைத்தனன் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது.[2] அக் கல்வெட்டு

1. Indian Antiquary- Vol 33, p. 96.
2. South Indian Inscriptions-Vol. IV, No. 225.

இனிய வெண்பாவாக அமைந்துள்ளது. அது,

1 முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒத்தமைத்த செப்பேட்டி னுள்ளெழுதி—இத்தலத்
தெல்லைக் கிரிவாய் இசையெழுதி னுன்கூத்தன்
தில்லைச்சிற் றம்பலத்தே சென்று

என்பதாம். எனவே, **திருஞானசம்பந்தர்**, **திருநாவுக்கரசர்**, சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் பாடி யருளிய **தேவாரப் பதிகங்களை நம்பியாண்டார் நம்பிகள்** தேடிக் கொணர்ந்து, திரு முறைகளாகத் தொகுத்த பின்னர், அப் பதிகங்கள் அழிந்து போகாதவாறு, **தில்லைமாநகரில் முதற் குலோத்துங்க சோழன்** காலத்தில், செப்பேடுகளில் எழுதி வைக்கப்பட்டன என்பது இங்கு அறியத் தக்க தாகும். அன்றியும், **தேவாரத் திரு** முறைகள் சிவாலயங்களில் வைத்துப் பூசிக்கப்பட்டுவந்தன என்பதும், அவற்றைக் கண்காணிப்பதற்கு ஒரு தமிழ் விரகரும், இறைவன் திருமுன் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வார் சிலரும், அந்நாளில், ஆலயங்களில், இருந்துவந்தனர் என்பதும், **திருமுறைகள் வைத்துப் பூசிக்கப்பெற்ற கோயில் மண்டபம் திருக் கைக்கோட்டி என்று வழங்கப்பட்டு வந்தது** என்பதும், சில கல் வெட்டுக்களால் புலப்படுகின்றன. அத்தகைய கல்வெட்டுக் களுள் ஒன்று, சீகாழியிலுள்ள திருஞானசம்பந்த மூர்த்திகள் கோயில் கருப்ப கிரகத்தின் தென்புறத்தில் உள்ளது. அது, 'திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ச ஆவது இராஜராஜ வளநாட்டுத் திருக்கழு மல நாட்டுப் பிரமதேயம் **திருக்கழுமலம்** கற்கடக நாயிற்று முதல் கிராம காரியஞ் செய்கிற பெருமக்களோம் ஆளுடைய பிள்ளை யார் திருமாளிகைத் **தமிழ்விரகர்** கண்டு இக்கோயில் **திருக்கைக் கோட்டியில்** எழுந்தருளி யிருக்கிற **திருமுறைகள்** திருக்காப்பு

1. 'வித்தகப் பாடல் முத்திறத் தடியரும், திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்' (திருவிடைமருதூர், மும்மணிக் கோவை-28.) என்னும் பட்டினத் தடிகள் திருவாக்கினுல் முத்திறத்தார் சைவ சமய குரவர் மூவருமே யாவர் என்பது வெளியாதல் காண்க. திருப்புறம்பியத்தி லுள்ள விக்கிரம சோழன் காலத்துக் கல் வெட்டு ஒன்று, 'திருப்புறம்பிய முடையார் கோயிலிலே முத்திறத் தடியார் அமுது செய்தருள' என்று கூறுவதும் இதனை வலியுறுத்துதல் ஈண்டு அறியற்பாலது.

நீக்கி அழிவுள்ளன எழுந்தருளுவிக்கவும் திருமுறைகள் எழுந்தருளுவித்தும் திருமுறை பூசித்து மிருக்கைக்கு இவ்வூர் காசு கொள்ளா இறையிலியாக இட்ட நிலம் இவ்வூர் சண்டேஸ்வர வதிக்குக் கிழக்கு நின்றான் வாய்க்காலுக்கு வடக்கு முதற்கண்ணாற்று இரண்டாஞ் சதுரத்துக் கீழ் இறையான் குடியால் பாரத்துவாசி ஸ்ரீகாழி நாடுடையான் திருவன்னி யுடையான் நிலத்து விளைநிலம்..........இந்நிலம் இருமாவரை அரைக்காணி முந்திரிகைக் கொல்லையும் குளமும் கழிக்கடை நீதொழிந்த பிரதான நிலம் குடியிருப்புத் திடர் நிலமும் சுத்தமலி வதிக்கு மேற்கு நின்றான் வாய்க்காலுக்கு வடக்கு முதற் கண்ணாற்று மூன்றும் சதுரத்துப் பாலாசிரியன் நடனதேவன் இந்நிலத்து வடமேற்கடைய புன்செய் நிலத்து உடைய புன்செய் நிலம் அரை மாவும் உள்படக் கைக்கொண்டு சந்திராதித்தவரை காசு கொள்ளா இறையிலி யாகவும் சில்வரி பெருவரி வெட்டி..........கொள்ளாதே மாகவும் சொன்னோம் இந்நிலங் கைக்கொண்டு அனுபவித்துத் திருமுறை திருக்காப்பு நீக்கி இப்படியேம் திருமாளிகையிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க—பணியால் ஊர்க்கணக்குப் பட்டன் பிரியன் எழுத்து.........................' என்பதாம். இஃது அரிய செய்திகளை அறிவிக்கும் ஒரு சிறந்த கல்வெட்டாகும். சீகாழிக் கோயிலி லுள்ள திருக்கைக் கோட்டியில் தேவாரத் திருமுறைகள் வைத்து வழிபாடு செய்யப்பெற்று வந்தன என்பதும், அத்திருமுறை ஏடுகள் பழுதுற்ற போது, அவற்றைப் புதுக்குதற்கு ஒரு தமிழ் விரகர் இருந்தனர் என்பதும், அவ்வூர்ச் சபையார், அவற்றின் வழிபாடு முதலியவற்றிற்கு, இறையிலி நிலம் அளித்துப் போற்றிவந்தனர் என்பதும், இக் கல்வெட்டினால் நன்கு அறியக் கிடக்கின்றன. இங்ஙனம் சிவாலயங்களில் வைத்துப் போற்றப்பட்டு வந்த தேவாரத் திருமுறைகள் செப்பேடுக ளாகவும், ஏட்டுச் சுவடிக ளாகவும் இருந்திருத்தல் வேண்டுமென்பதில் ஐய மில்லை.

இனி, நாகப்பட்டினம் தாலூகாவி லுள்ள திருக்காராயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு, அவ்வூர் ஆலயத்துத் திருக்கைக்கோட்டியில் திருப்பதிகம் ஓதுவார் சிலர்க்கு உணவளிக்க

இறையிலி நிலம் விடப்பட்ட செய்தியை உணர்த்துகின்றது.[1] திருஞான சம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் சிவபெருமான் பொற்காசு அளித்தருளிய தலமாகிய திருவீழிமிழலையில், நரசிங்க தேவன் என்ற தலைவன் ஒருவனால், திருக்கைக் கோட்டி மண்டபம் கட்டப்பெற்றது என்பது, அவ்வூரிலுள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது.[2] இந்நாளில் கோவிலூர் என்று வழங்கப்பெறும் திருவுசாத்தானம் என்னுந் திருப்பதியிலுள்ள திருக்கைக்கோட்டி ஓதுவார்க்கு இராஜ கம்பீர சோழிய வரையன் என்பான் இறையிலி நிலம் அளித்தனன் என்று அவ்வூரிலுள்ள கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.[3] எனவே, தேவாரத் திருமுறைகள் வைத்துப் பூசிக்கப்பெற்ற கோயில் மண்டபம் திருக்கைக்கோட்டி என்று முற்காலத்தில் வழங்கப்பெற்று வந்தமை காண்க.

1. Inscription No. 454 of 1908
2. ,, ,, 414 ,,
3. ,, ,, 203 ,,

# மகளிர் தம் கல்வி

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.
வரலாற்றாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சென்ற நூற்றாண்டில், ஆங்கில மொழியைச் செம்மை சான்ற, இன்னிசை நிரம்பிய தம் உரைநடையால் வளம் படுத்திய வரும், ஓவியத்தின் திறனை ஒல்லும் வகையால் எடுத்துக்காட்டி நிலைநாட்டினவரும், பொதுமக்களின் சீர்திருத்தத்தைப்பற்றிய முற்போக்குடைய கொள்கைகளைக் கொண்டிருந்தவரும் ஆகிய இரஸ்கின் என்பார், ஆடவர், மகளிர் கல்வி முறையின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி, 'எள்ளும் அல்லியும்' என்னும் தலைப்பையுடைய உயரிய நூலொன்றை இயற்றி வெளியிட்டனர். அதன் பிற்பகுதியில், அவர் மகளிர் கல்வியைப்பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்களெல்லாம் நந் தமிழ் நாட்டினருக்குப் பயனுடையதாகவிருக்கும் என்ற வெண்ணத்தால் அவற்றை இவண் மொழிபெயர்த்துளேன்.

ஆடவர் மகளிர் ஒருவருக்கொருவர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனப் பேசுதல் அறியாமையின் பாற்படும். அவ்வறியாமைக்கோ ஆதரவேதுமில்லை. அவ்விருவரையும் ஒரே நிலையில் வைத்துச் சீர்தூக்கலாகாதாம். ஒருவருக்கு இயல்பாக அமைந்து கிடக்கும் பண்புகள், மற்றவர் பாற்காணல் இலையாம். அவ்விருவருள், ஒருவருடைய குறைபாடுகளை, மற்றவர் நிறைசெய்கின்றனர். ஒருவர்பாலில்லாதனவற்றை மற்றவர் பாலிருத்தலைக்கொண்டு நிறைவுபெறச் செய்தலிலேயே, அவ்விருவரிடத்தும் இன்பமும் பெருமையும் விளையக்கூடும்.

இனி, அவ்விருவரின் தனிப்பட்ட இயல்புகளைக் கூறுவாம். வினைமேற்செலலும், முற்போக்கில் முனைப்புடையராக விருத்தலும், தற்காத்துக்கொளலும், ஆடவரின் சிறப்பியல்புகளாம். அவரே, தனிப்பட்டமுறையில், ஒன்றைச் செய்து முடிப்பவராம். இயற்றலும், புதுவது புனைதலும், காத்தலும் ஆடவர்

ஆற்றலின் உட்பட்டவையாகும். அவர்தம்மறிவு புதுமையிலும், சிந்தனையிலும் திளைக்கின்றது. அவருடைய வீரம் மறனிழுக்காப் போரிலும், இன்றியமையாது வேண்டப்படும் நாடுகோடலிலும் திகழ்கின்றது.

ஆனாலோ, மகளிரின் ஆற்றல் போர்புரிதற்காக அன்றும்; ஆட்சிபுரிதற்கே. அவர்தம்மறிவு, ஒன்றைப் புனைதலிலோ, புதுமையிலோ ஈடுபடுதல் கிடையாது. அணிவகுத்தலும், முடிவுகட்டலும் அவரின் அறிவுக்கு இயல்பாக வாய்ந்த பண்புகளாம். பொருள்களின் தன்மைபற்றிய பாகுபாடுகளையும், அவற்றிற்குரிய இடத்தையும், மகளிர் நன்கறிந்திருக்கின்றனர். சிறப்பை உண்மையிலுணர்ந்து, அஃதுள்ளவழி பாராட்டலே மகளிரின் மேம்படு செயலாகும். எத்தகைய பந்தயத்திலும் அவர் போட்டியிடுதலில்லை. அவற்றில், அவரே பரிசு வழங்குவர். புலன்கள் திரிகின்றவழி அவற்றைச் செல்லவிடாது தடுக்கும் வகையில், அவர்தம் கடமையும் இடமும் அமைந்திருக்கின்றன. விரிந்த உலகில் பாடுபடும் மகனுவான், பலவகை இடையூறுகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாதல் கூடுமன்றோ? அதன் பயனாய், அவன் எடுத்ததை முடிக்காமற்போதலும், தோல்வியுறுதலும், பிழை செய்தலும் இயற்கையாகும். அத்தகைய அமயங்களில், அவன் மேனி புண்படலும் இயலும்; பிறருக்குப் பணிந்து அடங்கி யிருக்கவேண்டியும் நிகழும்; நழுவினும் நழுவுவன். இக்காரணங்களால், அவனதுள்ளம் இரும்பெனக் கடியதாகும். எனினும், அவன் மகளிரை இத்தகைய அனுபவங்களினின்றும் காப்பாற்றுகிருன். அவராட்சி செய்யும் இல்லத்தில், அச்சமோ, பிழையோ, குற்றமோ அகற்றப்படுகின்றன. இஃதே இல்லறத்தின் உண்மை இயல்பாம். அஃதமைதிக் குறைவிடம். பிழை, ஐயம், பிணக்கு, கேடு ஆயவை அணுகா அரண் அவ்வில்லம். அங்ஙனமின்றேல், அதை இல்லம் என்பதற்கில்லை. பகைமையுடையதாகவும், அன்பும் ஒற்றுமையும் அற்றதாகவுமுள்ள புறசமுகமோ, உள்ளக் கலுழ்ச்சியோ, மனைவி கணவன் எவராலேனும் வாயிற்படியைத் தாண்டி இல்லத்தினுள் நுழைக்கப்படுமேல், இல்லம்

இல்லாததாகும். அது கூரை வேயப்பட்ட, விளக்கொளியுள்ள உலகத்தின் ஒரு பகுதியேயாகும். அது புனித நிலனுயிருப்பின், தூய பெண்தன்மை வீற்றிருக்கும் கோயிலாக இருப்பின், இல்லறத் தெய்வங்கள் வாழும் அடுக்களை ஒரு கோட்டமாயிருப்பின், கூரையும் விளக்கும், மேலான நிழலையும், ஒளியையும் அளித்தற்கூடும். அந்நிழலோ வெனின், பாலையிற் கிடைக்கப்பெற்ற மலையின் நிழலாகும். அவ்வொளியோ, புயல்வாய்ப்பட்ட நாவாய்க்குக் கலங்கரை விளக்கமாகும். இச்சீரிய பண்புகள் வாய்க்கப் பெற்றிருப்பின், அஃதே இல்லறத்தின் பண்பும் பயனுமாம்.

எவண் வாய்மையிற்சிறந்த மனைவியுளாளோ, அஃதே இல்லமாகும். அவள் தலைக்கு மேல் வான் மீன்கள் பதிக்கப்பெற்ற நீலவிதானமே கூரையாக இருக்கலாம்; அவள் காலடியில், இரவிற் பனிபடர்ந்து குளிர்ந்த புல்லின்மேல் மொய்க்கும் மின்மினியே விளக்காயிருக்கலாம்; எனினும் அவள் எங்குறைகின்றுளோ, அங்குதான் இல்லமாகும். உத்தம மகளிரைச் சுற்றிலும் அவ்வில்லம் நெடுந்தொலைவு விரிந்திருக்கிறது. அது கருங்காலி மரத்தால் ஒட்டிய மாளிகையிலும், அரக்கு வழித்தன்ன வானத்திலும் உயர்ந்தது. அஃதில்லமில்லார்க்கெலாம் இல்லமாகும். எனவே அஃதே பெண்ணின் நல்லாளின் தகுதியான இடம், உண்மையான ஆற்றலென நான் எண்ணுகின்றேன். நீவிரும் அதை ஏற்றுக்கொள்ளுவீர்.

இத்தகைய மேலான கடமையை ஆற்றவேண்டியவள், முடிந்தவரையில், பிழையற்றவளாய் இருத்தல் இன்றியமையாமை என்பதையும் நீவிர் உணர்வீரா? அவளாட்சி செய்கின்ற முறையில், யாவும் நேர்மையாக நடத்தல்வேண்டும். அவள் நிலையாய, மாறுபாடில்லா நலம் வாய்க்கப்பெற்றிருத்தல் வேண்டும். அவள் இழுக்கில்லா அறிவினளாதல் நலமாகும். அவ்வறிவும் தன்னல மேம்பாட்டுக்கு மட்டுமின்றி, பிறர் நலத்துக்காகவும் அமைந்திருத்தல் சிறப்புடையதாகும். தன் துணைவனுக்கு எவ்வாற்றானும் ஆதரவு அளித்தற்கு அவ்வறிவென்பது பயன்படுத்தப்பட வேண்டுமேயல்லாது, தன்னை

அவனினும் மேலாக ஆக்கிக் கொள்வதற்கன்றும். பிறகூறப் பட்டதாக இருப்பின், அஃதகலமற்றதாக, காதலற்றதாக, வீண் பெருமையுடையதாகவன்றோ ஆய்விடும். பெண்ணணங் கென்பாள், உண்மையான 'மாறுதல்' உடையளாதல் வேண்டற் பாலது. அது காற்றினால் அலைப்புண்ட மரத்தின் நிழல் மாறு படுவது போன்றதன்று. ஒளியின் மாறுதலைப் போலாம். அவள் தன் மாறுதல், எப்பொருள் மேல் படினும், ஒளி அப்பொருளை யும் அதன் நிறத்தையும் மேன்மையுறச் செய்வது போன்ற பன்னலம் வாய்க்கப்பட்டவள்.

இதுகாறும் மகளிரின் இடம், ஆற்றல் ஆயவை எத்தகை மைத்தன வாயிருத்தல் வேண்டும் என்பதைப்பற்றிப் பேசி னோம். மேற்கூறிய, சீரிய கடமைகளை ஆற்றுதற்கு அவளுக் கேற்ற கல்வி முறையாது? அவளுடைய உடல் உரம்பெறு தற்கும், அழகுபெறுதற்கும் ஆய உடற்பயிற்சியை அவளுக்குக் கொடுத்தல் நம் தலையாய கடனாகும். சிந்திப்பவர் உளத்தில் இதைப்பற்றி யாதொரு ஐயமும் எழுதற்கியலாது. அழகு விளக்கமுறு வினையாலும், மெல்லிய வலியாலும் மட்டுமே நுட்பமடைகின்றது. உடலைத் தன்னிச்சையாய் விடுதல் அழகை முற்றுப்பெறச் செய்யாதாம். உளத்தையும் அங் ஙனமேவிடின், அது கைகூடும். பிறகவிகளிலெல்லாம் சிறந்ததாக ஒரு புலவனின் கவியில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றில், அக்கவிஞன், சில சொற்களில், மகளிர் அழகு தோன்றும் முறையையும், அவ்வழகு எங்ஙனம் முற்றுப் பெறுகிறதென்பதைப் பற்றியும் கீழ்வருமாறு விளக்கியுள்ளான்:

"மூன்றாண்டுகள் வெயிலிலும் மழையிலும் அவள் வளர்ந் தாள். அவளைக்கண்ட இயற்கைத்தாய்," இத்தகைய அழகிய மலரை நான் எங்கணும் கண்டதில்லை. இக்குழவியை நானே எடுத்துக்கொள்வேன். இவள் என்னுடைய குழந்தையாம். இவளை என்னைப்போன்றவனப்பினள் ஆக்குவேன். நானே என் செல்வத்துக்கு ஊழும் உணர்வுமாவேன். என்னுடன் அவளும் குன்றிலும், பள்ளத்தாக்குகளிலும், வனத்திலும், நிலத்திலும், பொழிலிலும், பூங்காவிலும், திரிவாள். வானத்தில் மிதக்கும்

கார்மேகங்கள் அவளுக்குத் தம் நிலையை நல்கும். மரத்தின் கிளைகளும் அவளுக்கென வளைகின்றன. புல்லின் வளர்ச்சியிலும், அவள் தன் பெண்ணுருவைச் செப்பனிடும் ஓரழகைக் காண்பள். உயிர்போலும் மகிழ் வுணர்ச்சி அவளுடைய உருவத்தைப் பெருமைசால் வடிவமாக்கும். அம்மகிழ் வுணர்ச்சியே அவள் தன் கொங்கைகளை விம்மச்செய்யும், இனிய பள்ளத்தாக்குகளில் நானும் அவளும் கூடி உலாவுகையில், இத்தகைய எண்ணங்களை என் உளூசிக்கு வெளியிடுவேன். என உரைத்தாள். மேலே "உயிர்போலும் மகிழ்வுணர்ச்சி" எனப் பட்ட சொற்றொடரை நோக்குமின் சொல்லத்தக்க மகிழ் வுணர்ச்சியும் இருக்கிறது. இயற்கைக்கு ஒத்ததே உயிர்போலும் மகிழ்வுணர்ச்சி என்பது. அது வாழ்க்கைக்குப் பெரிதும் வேண்டப்படுவதொன்றும்.

உயிர்போன்ற உணர்ச்சியாதல் வேண்டுமெனின், அது மகிழ்வுணர்ச்சியே யாகும். நீவிர், ஒரு பெண்ணணங்கை மகிழ் வுடையவளாக்காமல், அழகுடையவளாகமட்டும் ஆக்கலாம் என வெண்ணல் பிழைபாகும். நல்லாள் ஒருத்தியின் இயற்கையை நீவிர் சிறிதளவேனும் தடைப்படுத்தினும், அவள் தன் முயற்சியையோ ஆர்வத்தையோ முட்டுப்படுத்தினும், அவ்வொரு தடையும் முட்டுப்பாடும், அவளுடைய கண்ணின் ஒளியை மங்கச் செய்யத்தக்க, புருவங்களின் வனப்பைக் கெடுக்கத்தக்க கோடுகளை அவள் முகத்தில் கீறுகின்றது. முன்னர் எடுத்தாண்ட செய்யுளொன்றில், பெண்ணின் அழகு திறமையுடன் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அதுவருமாறு: "அம்முகத்தில் ஆற்றிய கருமங்களின் இனிமையும், இனி ஆற்றவேண்டிய கருமங்களின் இனிமையும் கலந்து விளங்குகின்றது." மகளிரின் முகத்தின் முழுமதியனைய அழகு, பெருமைசால் அமைதியினின்றே உண்டாகிறது. இன்பமும் பயனும் பயந்த சென்ற பல ஆண்டுகளின் நினைவினால் அவ்வமைதி ஏற்படுகிறது. அத்துடன் உயரிய பிள்ளைமையும் கலப்பதால், அவ்வமைதி மிகுதியாகின்றது. நற்பணிகளை ஆற்றுவோம், பல நலன்களைப் பிறருக்கு அளிப்போம் எனும் புனிவான எண்ணத்தால் விளக்கமுறும் அப்பிள்ளைமையும்,

அத்தகைய வருங்கால உணர்ச்சி இருக்கு மிடத்தில் மூப் பென்பதே கிடையாதாம். அங்கு மாரு இளமை கூத்தாடு கின்றது.

இதுகாறும் கூறிய வண்ணம், நீவிர் நும் மகளிரின் உட லமைப்பை உருவாக்குதல் வேண்டும். பின்னர், அவளின் ஆற்றலுக் கேற்ற முறையிலும், அவள்தன் இயல்பான அற, காத லுணர்ச்சிகளுக்கு ஒப்பவும், எண்ணங்களையும், பொருளறி வையும் அவளுளத்தில் புகுத்திச் செம்மை செய்தல்வேண்டும்.

அவளுக்கு அளிக்கப்படும் கல்வியும், பொருள் அறிவும், அவளுடைய கணவனின் அலுவலை உணர்தற்கும், உணர்ந்து துணைபுரிதற்கு ஏற்றதாகவும் இருத்தல்வேண்டும். ஒன்றைப் பற்றி அறிதற்குமட்டும், அவளுக்குப் பயிற்சி யளித்த லாகாது. அதை உணர்தற்கும், மதிப்பிடுதற்கும் உரிய பயிற்சியை யன்றோ அளித்தல் வேண்டும். பெருமைக் கெனவோ, முழு அறி வுக்காகவோ, ஒருத்தி, பல மொழிகளிலோ, ஒரு மொழியிலோ திறம் பெறல் பயனற்றதாகும். ஆனல், அயல்நாட்டான் ஒருவ னிடம் அன்பொடு ஒழுகல் முறை அவளுக்குத் தெரிதல் வேண்டற் பாலதொன்ரும். அவனுடைய மொழியின் இனிமை யறிந் தின்ப முற, அதை அவள் கற்றல்வேண்டும். இவ் வறி வியற் றுறையிலேயோ, அவ் வறிவியற் றுறையிலேயோ அவள் திறனுடையாளாதல், அம் மங்கையின் பெருமையையோ, நலன் களையோ உயர்த்துவதன்ரும். நேரான எண்ணங்களை எண்ணும் படி அவளுக்குப் பயிற்சி யளித்தல்வேண்டும். இயற்கை விதி களின் (Laws of Nature) உண்மையையோ, அவை நிகழ்வுறும் தன்மையையோ, அவற்றின் அழகிய ஒழுக லாற்றையோ அறியவேண்டும் என்பதும், தற்பெருமை அழியும் வரை, அவள் ஓரறிவியற் றுறையில் வெற்றிபெற முயலவேண்டு மென்பதும், பேரறிவாளிகளைப் போல், தான் கடற்கரை இப்பியைப் பொருக்கிக்கொண்டிருக்கும் கல்லாச் சிறுமி எனக்கூறிக்கொள்ள வேண்டு மென்பதும் வேண்டாவாம். அவள் பெரு நகரங்களின் எல்லாப் பகுதிகளையும் அறிதலோ, வரலாற்று நிகழ்ச்சிக் காலத்தை யறிதலோ, பல உலக அறிஞரின் பெயர்களை

யெல்லாம் தெரிதலோ வேண்டாவாம். மகளிரை அகராதி யாக்குதல் கல்வியின் நோக்கமன்று. ஆனல், அவள் வரலாற்றைப் படிப்பாளாயின், அதனுள் தன் முழு இயல்போடும் நுழைந்து திளைக்கவேண்டும் என்பதைக் கற்பித்தல் இன்றியமையாததாம். தான் அங்ஙனம் அறிந்த நிகழ்ச்சிகளைக், கற்பனைத் திறனல், தன் உளக் கண்ணில் சித்தரித்துக்கொள்ளக் கற்றல் நலமாகும். வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ள இரங்கத்தக்க நிகழ்ச்சிகளையும், நாடக வழக்கில் வரையப்பட்டுள பகுதிகளையும், அக்கற்பனையாலும், அவள் இயற்கையாகப் பெற்றுள்ள உணர்வு நுட்பத்தாலும், அவள் ஆறிதற்குக் கற்றல்வேண்டும். இன்பத்திலும், துன்பத்திலும் மறைந்து கிடக்கும் தெய்வ முறையையும், பிழையையும், அதன் பயனையும் சேர்த்துப் பிணிக்கும் வினையெனும் நெருப்பினல் திரிக்கப்பெற்ற தாம்பையும் தொடர்ந்து கண்டுபிடிக்கக் கற்றல்வேண்டும். இவற்றிற்கும் மேலாக, அவள், தன் இரக்கத்தை, அவள் காலத்தில் நிகழும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பரப்புதல் வேண்டும். ஊறுகள் நிகழ்வதைக் கண்டு அவள் உள மிரங்கினல், அத்தகைய நிகழ்ச்சிகள், பின்னர், எஞ்ஞான்றும், நிகழ்தல் இல்லை என்பது உறுதியாம். துன்பம் என்பதை அவள் நேர்முகமாக அறியாதவளாக விருப்பினும், நாடோறும், அவள், கற்பனையின் துணைகொண்டு, துய ருறுவோரின் உள நிலையை அறிதல் நலமாகும். இவ்வுலகம் இறையுறை உலகின் அன்புக்கும், பெருமைக்கும் ஈடாகாதென அவள் உணர்தல் நன்மையைப் பயக்கும். அவளுடைய கடவுட் காதல் நிறைவுடையதா யிருக்கவேண்டும் என்பதும், தங்களைக் காதலித்தற்கு யாரு மற்ற கோடிக் கணக்கான மக்களுக்காக அவள் கடவுளிடம் முறையிட்டுத் துதிக்கும்போது, தன்னுடைய கணவன், குழவிகளுக்காக முறையிடுதலினும், பன் மடங்கு ஆர்வத்துடன் முறையிடல்வேண்டும் என்பதையும் அவள் கற்றல் இன்றியமையாததாம். அப்படியே, துணை யற்றவராகவும், துன்பத்துக் கிருப்பிடமாகவும் உலகில் இருப்பாருக்காகவும் அவள் கடவுள்பால் மன்றுடுதல் வேண்டும்.

(தொடரும்)

## கலைச் சொல் லாக்கம்.

### சீனிவாச சாத்திரியார் குழுவும் அதன் முடிபுகளும்.

ஏழாண்டுகட்கு முன்னர், அரசியலார், ஆங்கிலக் கலைச் சொற்களை, இம் மாகாண நன்மொழிகளில், அவற்றின் சமச் சொற்களுடன், வெளியிட்டனர். அவற்றுள், தமிழ்ச் சொற்கள் கல்லூரிகளிலும், பொது மக்களாலும், பயன்படுத்த முற்றிலும் தகுதி யற்றனவா யிருந்தபடியால், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார், இவ் வேலையி லீடுபடக் கூடிய எல்லாச் சங்கங்களை யும், பெரியார்களையுங் கலந்து கொண்டு, இச் சென்னை அரசியலா ரன்றித், திருவாங்கூர், இலங்கை அரசியலார், சென்னைப் பல் கலைக் கழகத்தார், சென்னை மாகாண ஆசிரியர் குழு, எல்லா வகைக் கொள்கைகளையு முடைய நூற்றுக் கணக்கான புலவர் கள், இவர்களின் உதவியும், ஊக்கப்பாடும் பெற்றுக், கலைச் சொற் கள் எனும் பெயர் பூண்ட தமிழ்ச்சொற் றொகுதியை, ஆங்கிலச் சமச் சொற்களுடன், வெளியிட்டனர். இந் நூல், மாகாணக் கல்வி மேற்பார்வை யாளரா (Director of Public Instruction) லேயே போற்றப்பட்டு, 22-11-38 தேதிய, அரசியல் கட்டளை, எண் 2406/G. 38-இல், எல்லா உயர் கலாசாலைகளுக்கும் விலையின்றி வழங்கப்பட்டு, வழக்காற்றிற்குக் கொண்டுவரும்படி, தாங்குரை கூறவும் பெற்றது. இதன் பயனாக, இக் கலைச் சொற்கள், பள்ளி ஆசிரியர்களாலும், நூலாசிரியர்களாலும், பதிப்பாளர்களாலும், பாடச் சுவடிக் குழுவால் (Text Book Committee) ஒப்பம் பெற்ற பலப்பல நூல்களிலும், பயன்படுத்தப்படுகின்றன. இம்மட்டு மன்றி, இவை, ஆன்றோராலும், பொதுமக்களாலும், பேச்சு, எழுத்து வகைகளிலும் வழக்குப் பெற்று வருகின்றன வாதலின், கூடிய விரைவில் செல்வாக்குப் பெறும் நிலையி லிருக்கின்றன. இந் நிலையில், திடீரென்று, கொள்கையிலும் செய்கையிலும் ஏதே னும் மாற்றம் ஏற்படின், யாவரிடத்தும் குழப்பமும் வருத்தமும் உண்டாவ தன்றி, நூலாசிரியர், பதிப்பாளர், மாணவர், பொது

மக்கள், இவர்களிடையே இழப்பும் ஏற்படுமென்பது கண்கூடு. ஏனினும், மேற் கூறியவாறு, நல்வழிக்கு வந்த அரசியலாரே, 8—6—40இல், இச் சென்னை மாகாணத்தில், நன்மொழிக் கலைச் சொற்களை யெல்லாம் ஒரே யடியாய்த் திட்டப்படுத்தத் 'தேர்ந்த குழு' வெனப்பட்ட ஓர் சிறு கூட்டத்தை ஏற்படுத்தி, எண்ணங்களிலும், குறிக்கோள்களிலும் பெரும் மாற்றங்களுடைய அவர்களுடைய தாங்குரைகளை முன்பின் கூர்ந்து நோக்காது, பல எதிர்ப்புகளுக் கிடையே ஒப்பிவிட்டனர். இது பற்றிய குறைபாடுகளாவன:—

I. இச் சாத்திரியார் குழு,

(அ) **ஒரே போக்குடையது.**—இதில் ஆங்கில, சமக்கிருத சொற்களில் உறுதியான பற்றுடையவர்களே பொறுக்கிச்சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், இம் மாகாணத் தாய்மொழிகளின் உண்மைப் போக்கு, இயல்பு, சொல்லாக்க முறை, இலக்கணம், இவற்றில் தேர்ச்சி பெற்றுள்ளோரும், இவ்வகையில் முன்பு வேலை செய்துள்ள ஒவ்வொருவரும், கண்காணாதபடி, வேண்டு மென்றே விலக்கப் பட்டிருக்கின்றனர்.

(ஆ) **மிகச் சிறியது.**—பதினைவரே, சில மணி நேரத்தில், பல மொழிகளின் இயல்புகளை, அடக்கி யாண்டுத், தம் வழிக்குக் கொண்டுவர முயன் றிருக்கின்றனர்.

(இ) **சிறிதும் திறமை யற்றது.**—இக் குழுவினர் தமிழறிவும், திராவிட மொழியிய லறிவும் இல்லாதவர்கள். அன்னார் ஒவ்வொருவரும், ஒவ்வொரு துறையில், தேர்ந்தோர் என்பதில் ஐயமில்லை. ஆனால், அத்துறை ஒன்றுவது சொல்லாக்கத் தொடர்புடையது அல்ல.

II. இச் சாத்திரியார் குழுவிற்குக் கொடுக்கப்பட்ட ஆய்வுக் கூற்றுகள் (Terms of reference),

(அ) **குறுகியன.**—அவை, முதல் வாக்கியத்தில், 'கல்விக் காரியங்களைப்' பற்றியும் அடுத்த வாக்கியத்தில், 'கல்லூரிக் காரியங்களைப்' பற்றியும் கூறுகின்றன. ஒன்றுவது 'பொது மக்கள் காரியங்களைப்' பற்றிக் கூற வில்லை.

(ஆ) **ஈரோட்டானவை.**—அவற்றி லுள்ள, 'எல்லாத் தென் னிந்திய மொழிகளில் வெளிநாட்டுத் தொழின்முறைச் சொற்களின் சமச்சொற்கள்' எனுந்தொடர், அம்மொழிகளைத், தனியாகவோ, ஒன்ருகவோ, எடுத்துக் கருதவேண்டு மெனக், கூறவில்லை.

(இ) **பிழை யுடையன.**—இப்பொழுது, ஒரு தாய்மொழி யிலாவது, மொழி யில் பாடங்களைக் கற்பிக்கும் பொழுது, ஆங் கிலச்சொற்கள் பயன்படுத்தப்பட வில்லை யாதலின், அதிலுள்ள ஆங்கிலச் சொற்களை மறுபடியும் வைத்துக் கொள்ளலாமா எனுங் கேள்வி எழவில்லை.

III. இக் குழுவின் தாங்குரைகள்,

(அ) **ஒரு போக்குடையன.** — சில சொற்களுக்குப் பதி லாகச் சமக்கிருதச் சொற்களையும், ஏனைய சொற்களுக்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களையும், தேர்ந்துகொள்ள வேண்டு மெனக் கூறுகின்றனவே யன்றி, ஒன்றிற்காவது காரணம் கூற வில்லை.

(ஆ) **முரண்பா டுடையன.**—உருது மொழிக்கு அராபிய, பாரசீக வேர்ச் சொற்களை (அடியங்களை)ப் பயன்படுத்தும்படி பரிந்து பேசும்பொழுது, ஒரஞ் செய்யாது, திராவிட மொழிகளுக் கெல்லாம் திராவிட அடியங்களையே ஏற்றிருக்கவேண்டும். எல்லா மொழிகளுக்குள்ளேயும் கலைச்சொல்லொற்றுமை யுண் டாக்கப் புகுந்தபின், 'கீழ்நிலைக் கல்லூரிச் சொற்களு'க்குள்ளும் 'உளப்பாட்டுப், பண்புப் பெயர்கள், எண்ணங்களு'க்குள்ளும் வேற்றுமையுடைய சொற்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(இ) **இயன்முறை யற்றன.**—கடன் வாங்கவேண்டு மாயின், சமக்கிருதம் போன்ற, இறந்த இடைமொழி யொன்றின் வாயி லாக வாங்குவதினும், நேரிற் கடன் வாங்குவது மேலானதாகும். ஆங்கிலக் கலைச்சொற்கள் தாய்மொழிக்கு எவ்வளவு அயன்மை யும் நூதனமு முடையனவோ அவ்வளவு சமக்கிருத மொழிக்கு உடையனவாகும்.

(ஈ) **தகுதி யற்றன, அருங்கேடு விளைவிப்பன.**—ஆங்கிலச் சொற்களை, அப்படியே தமிழி லெழுதித், தமிழ் வாக்கியத் துடனேயே வாசித்தால், அவற்றின் ஒலி வெறுப்பையே விளை விக்கும். அச்சொற்களைத் தமிழில் சரியாய் எழுதவும், எழுத்துக் கூட்டவும் முடியாது. அவை தமிழில் உச்சரிக்கப்படும் பொழுது, மிகவும் மாறுபட்டு, நகைக்கத் தகுந்தன வாகவும், உருத் தெரியாதன வாகவும் ஆகும். அவை ஓர் செத்த பழுவாக இருந்துகொண்டு, அவற்றிலிருந்து வகைச் சொற்கள், சிறப்பாய் வினைவகைச் சொற்கள், பிறப்பதற்கு இடந் தராதன வாகும். அவை பொதுமக்களிடையே இயலறிவைப் பரப்புதற்குப் பெருந் தடை யாகும்.

(உ) **குறுகிய நோக்க முடையன.**—தாய் மொழிகள் கூடிய விரைவில் தமதுரிமையை யடைந்து, பல்கலைக் கழகங்களிலும், மேலாராய்ச்சித் துறையிலும், ஆங்கிலத்தை இடம் பெயர்க்கும் என்பதும், அப்பொழுதாவது, ஆங்கில, சமக்கிருதச் சொற் களைப் பயன்படுத்திக் கலைகளைக் கற்பிப்பது, பிறமொழி வாயி லாகப் பாடங்களைக் கற்பிப்பதைப் போன்றே, இன்னும் மிகுதி யாகவுங் கூட, வீண் வருத்தந் தருவதாகக் கண்டு நீக்கப்படு மென்பதும் இக் குழுவினரால் எதிர்நோக்கப்படவில்லை.

(ஊ) **செயன்முறைக் கோவ்வாதன.**— பல மொழிகளில் ஒருமைப்பாடு காண முயல்வது படுதோல்வியையே விளைவிக்கும். இலக்கணச் சொற் கூட்டுக் குழுவின் வேலையும், ஆங்கில நாடு, அமெரிக்கா, சென்னை மாகாணத்திலுங்கூட ஏற்பட்ட சில பல எழுத்துக்கூட்டு, உச்சரிப்புச் சீர்திருத்தச், சங்கங்களின் வேலை களும் பயன்படவில்லை. அரசியலார் பெருமைபடக் கூறுவது போல், இச் சென்னை மாகாணத்தில் எல்லா மொழிகளுக்கும் பொதுச்சொற்கள் அமைக்க, இவ் வரசியலார் உள்பட ஒருவரும் முன்வரவில்லை. எல்லாக் கண்டங்களுக்கும் முன்னணியிலுள்ள, ஐரோப்பாக் கண்டத்துள்ள, நெருங்கிய தொடர்பும், ஒற்றுமையு முடைய, பலமொழிகளுள்ளும், இத்தகைய முயற்சி எடுக்கப் படவில்லை.

(எ) வீணனவை.— கலைச்சொற்களுள் ஒருவகை ஒற்றுமையு மின்றியே, கலையறிவை அவ்வம் மொழிப் பரப்பில் எளிதில் கற்பித்துப் பரவச் செய்தல், எல்லாவகையிலும், முடியாததல்ல. தமிழ், ஒரு மொழியினின்றுங் கடன் வாங்காது, தனித் தியங்கும் வன்மையுடையது.

(ஏ) பிடிவாத முடையன —இனி அமைக்க விருக்கும் பல தனிக் குழுக்களுக்குத், திருவாங்கூர், மைசூர், ஐதராபாக்கம், ஆந்திர நாடு, முதலியவிடங்களில் நடைபெறுகிற சில முன்னேற்ற வேலைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. ஆனல், தமிழ் நாட்டில், இவ்வகையில், மக்க ளொப்பிய, சிறந்த, முயற்சி எடுக்கப் பட்டிருந்தும், தமிழ் பேசுவோர் இக் குழுவில் மிக்கிருப்பதோடு, தக்க பதவியேற் றிருந்தும், இதுபற்றி ஒன்றுங் கூறுதிருப்பது வியக்கத் தகுந்ததே.!

ஆதலின், இச் சாத்திரியார் குழுவின் தாங்குறைகள் நன்முறைக்குக் கொண்டுவரத் தகாதன. இவற்றை விடுத்துப், பொது மக்களிடையேயும், கலை யறிவு பரவும்படிக்கும், கலைச் சொற்கள் திட்ட மடையும் படிக்கும், ஒவ்வொரு மொழிக்கும், தனித்தனிக் குழு புதிதாக ஏற்படுத்தி, முறைப்படி வேலை செய்யவேண்டும். இதற்கிடையே, குழப்பத்தை நீக்கக், கலைச் சொற்கள் எனும் நூலுட்கண்டுள்ள சொற்கள், சடுதியில் மாறுமென்ற பயமின்றிக், கல்லூரி ஆசிரியர், நூலாசிரியர், பதிப்பாளர் யாவராலும் பயன் படுத்தப் படலாமென்று, அரசியலார் அறிவிக்க வேண்டும், கலைச்சொற்கள் எனும் நூலொன் றிருப்பதாகவே தெரிந்துகொள்ளாத பள்ளி யிறுதித் தேர்வாளர்களின் பார்வைக்கு அந்நூல் கொண்டுவரப்படவேண்டும். இவ்வாறு, தமிழ் நாடெல்லாம் கிளர்ச்சி செய்து, விண்ணப்ப மனுப்பி, முறையீட்டுக் குழு அமைத்து, அரசியலாரை நல்வழிப் படுத்தினல்தான், தமிழாக்கம் மேன்மையுறும்.

# கலைச்சொல்லாக்கம்

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., ஜயன்பேட்டை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௮, பக்கம் 326.)

49. Ready Reckoner-நொடிக் கணக்கன். ஈண்டு அன் விகுதி கருவிப் பொருளைக் குறிக்கின்றது. அளப்பான், அடைப்பான் முதலிய சொற்களைப் பின்னர்க் காண்க.

50. Recur-மடங்கி வரும். இலக்கணவழக்கு; செய்யுளியலில் இடை மடக்கு முதலியவற்றைக் காண்க.

51. Represent-வகை குறி. இது, பெயராய், ஒருவகையைக் குறித்தலினும், வினையாய்க், குறிக்கக் கூறலினும், வகைகுறியெனப் பொதுப்படப் பெயரிடப்பட்டது. Representation-அவ்வகையைக் குறித்து நிற்றலின், வகைக்குறிப்பீடு; Graphic Representation-கட்டக் குறிப்பீடு; Symbolic Representation-குறியீட்டுக் குறிப்பீடு.

52. Sector - ஆரைப் பகுப்புத் துண்டு என்பதைச் சுருக்கின், ஆரைத்துண்டு என வருவதே போதுமானது.

53. Simplify-சிறிதாக்கு, எளிதாக்கு; Contract-சுருக்கு.

54. Square-சச் சவுக்கம் என்பதும் வழக்கி லுள்ள சொல்; எனவே, Rectangle-சவுக்கம் ஆகும்; இது நீள் சதுரம் என்பதினும் எளிய சொல்லே.

55. Survey-நில அளப்பு; Surveying-நில அளவை.

56. Table-நிரலீடு; Tabulate-நிரலிடு; Tabulation-நிரலிடுகை.

57. Transversal-வெட்டுங்கோடு; வெட்டி என்பதே சாலும்; வெட்டுவது குறுக்கேயன்றி, வேறு வகையி லன்றாதலின்.

58. Unit-அலகு. எண் சுவடியில் அலகுநிலை என்பதையும், செய்யுளியலில் அலகிடலையுங் காண்க. Unity-ஒருமைப்பாடு என்பது மொரு பொருள்.

(தொடரும்)